DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Calender | Case No. CC . 22/2017 |
| Miscellaneous | |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution Pw 4 |
| Name | இராஜேந்திரன் |
| Father / Husband Name | செல்லச்சாமி |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 11th January 2023.

---

**முதல் விசாரணை:-**

1) நான் காளையார்கோவிலில் வசந்த நகரில் குடியிருந்து வருகின்றேன். நான் கூலி வேலை செய்து வருகின்றேன். புகார்தாரர் காமாட்சியைத் தெரியும். எதிரிகளைத் தெரியும். புகார்தாரருக்கும், எதிரிகளுக்கும் சொத்து பிரச்சனை நடந்தது. தேதி, மாதம், வருடம் ஞாபகமில்லை. சுமார் 10 வருடங்களுக்கு மேல் இருக்கும் காமாட்சிக்கும், எதிரிகளுக்கும் இருந்த சொத்து பிரச்சனை காரணமாக காமாட்சிக்கு காயம் ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். அவரது காயத்திற்கு அவரது தம்பி பழனி தான் காரணம் என்று கேள்விப்பட்டேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**

1) போலிசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் ஞாபகமில்லை. காமாட்சி குடும்பத்தில் அவரது அண்ணன் தம்பிகளுக்குள் சொத்து சம்பந்தமாக பல காலமாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால் அது பற்றி தெரியாது. காமாட்சி தினசரி காளையார்கோவில் செல்வாரா என்றால் தெரியாது. நான் காளையார்கோவிலுக்கு காலையில் சென்றால் மாலை தான் திரும்ப வருவேன் என்றால் சரியல்ல காலை 06.00 மணிக்கு செல்வேன் பகல் 11.00 மணிக்கு சாப்பிட வந்துவிடுவேன் திரும்பவும் காளையார்கோவில் செல்வேன்.

2) காமாட்சி தினசரி காளையார்கோவில் வருவதாக கேள்விப்பட்டிருக்கிறேனா என்றால் ஆமாம். காளையார்கோவில் காளீஸ்வரன் கோவில் முன்பு தினமும் அமர்ந்து அங்கு போய் வருபவர்களிடம் இருந்து பணம் வாங்கி சாப்பிடுவார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் இன்று சாட்சி சொல்ல வரும் போது என்னுடன் முத்துராமலிங்கம், சண்முகம் ஆகியோருடன் ஒன்றாக வந்தோம் என்றால் சரிதான் எனக்கு நடக்க முடியாததால் ஒன்றாக வந்தோம்.

(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 11.01.2023
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
**சிவகங்கை.**